தினமணி

**நாள்களுக்கு மட்டுமே மேட்டூர் அணையில் நீர் இருப்பு**



நிகழ் ஆண்டில் மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு ஞாயிற்றுக்கிழமை வரை 34.18 டி.எம்.சி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இப்போது மேட்டூர் அணையில் உள்ள நீர் இருப்பு இன்னும் 13 நாள்களுக்கு மட்டுமே போதுமானதாக உள்ளது.

செப்டம்பர் 17-ஆம் தேதி முதல் சம்பா நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது.

சம்பா நெல் சாகுபடி முழுமை பெற 120 டி.எம்.சி தண்ணீர் தேவை. ஞாயிற்றுக்கிழமை வரை 34.18 டி.எம்.சி தண்ணீர் மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்பட்டுள்ளது. இப்போது மேட்டூர் அணையில் 29.19 டி.எம்.சி தண்ணீர் மட்டுமே இருப்பு உள்ளது.

நீர் வரத்து வினாடிக்கு 1,362 கனஅடியாகக் குறைந்த நிலையில், அணையிலிருந்து பாசனத்துக்கு வினாடிக்கு 18,178 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. இப்போது மேட்டூர் அணையில் உள்ள நீர் இருப்பு 13 நாள்களுக்கு மட்டுமே போதுமானதாக உள்ளது.

**காய்கறிகள் கண்காட்சி**

திருப்பரங்குன்றம், அக். 14: திருநகர் கள்ளர் சீரமைப்பு மாணவர் விடுதியில் காய்கறிகள் கண்காட்சி சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சியை கள்ளர் சீரமைப்புத் துறை இணை இயக்குனர் சோ.செல்லம் துவக்கிவைத்து, மாணவர்களுக்கு காய்கறிகள் மற்றும் பழவகைகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை விடுதிக் காப்பாளர் ல.அந்தோணிசாமி மற்றும் பணியாளர்கள் செய்திருந்தனர்.

**மேகமலையில் கால்நடைகளை மேய்க்க அனுமதிச்சீட்டு பெற வேண்டும்**

ஆண்டிபட்டி, அக். 14: மேகமலை வனச்சரணாலய பகுதியில் கால்நடைகளை மேய்க்க அனுமதி பெற வேண்டும். விவசாயம் செய்ய அனுமதி கிடையாது என வட்டாட்சியர் தெரிவித்தார்.

வருசநாடு மலைப்பகுதி வனவிலங்கு சரணாலயமாக மாற்றப்படும் என கடந்த 2009-ம் ஆண்டு அரசு உத்திரவிட்டது. இதனால் இப்பகுதியில் விவசாயம் செய்து வரும் விவசாயிகள் தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்று கடந்த இரண்டு வருடங்களாக பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

கடந்த வாரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் கூட்டத்தில் வருசநாடு வனச்சரக பகுதியில் கால் நடைகளை மேய்ச்சலுக்கு அனுமதிக்க வேண்டும் என்று கூறியிருந்தார்கள். இது குறித்த ஆலோசனை கூட்டம் ஆண்டிபட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டு இருந்தது.

ஆண்டிபட்டி வட்டாட்சியர் அலுவகத்தில், பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் அனிதா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆண்டிபட்டி வட்டாட்சியர் மற்றும் வனத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் விவசாயிகள் தங்களது வனப்பகுதியில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுமதிக்கவேண்டும் மற்றும் விவசாயிகளின் விலைநிலங்களுக்கு சென்று வர அனுமதிக்க வேண்டும் என கோரிக்கைகளை வைத்தனர்.

இது குறித்து ஆண்டிபட்டி வட்டாட்சியர் எம்.கே.ராஜேந்திரன் கூறியது: மேகமலை வனச்சரணாலய பகுதியில் விவசாயிகள் தங்கள் கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுமதிக்கவேண்டும் என்று கூறியிருந்தார்கள். அனுமதிச் சீட்டு வழங்கப்பட்ட கால்நடைகள் வனப்பகுதியில் மேய்சலுக்கு செல்ல தடையில்லை.

மற்றும் புதிய கால்நடைகளுக்கு அனுமதி சீ6ட்டு பெற வேண்டுமானால் சம்மந்தப்பட்ட கால்நடைகளை வனஅலுவலகத்தில் கொண்டுவந்து காண்பித்து அனுமதி சீட்டை வாங்கிச்

செல்லவேண்டும். விவசாயிகளின் விலைநிலங்களில் விவசாயம் செய்ய தடையில்லை. வனப்பகுதிக்குள் விவசாயம் செய்ய அனுமதியில்லை என்றார்.

தினமலர்

## வேர்க்கடலையை வெட்டி எடுக்கும் விவசாயிகள்

காஞ்சிபுரம்: மழை குறைவு காரணமாக, மண்ணில் ஈரப்பதம் இல்லாததால், அறுவடைக்கு தயாரான வேர்க்கடலையை, பிடுங்கி எடுப்பதற்கு பதில், மண்வெட்டியால் கொத்தி எடுக்கும் பரிதாப நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் விப்பேடு, விஷார், முத்துவேடு, பிச்சவாடி, பெரும்பாக்கம் உள்ளிட்ட கிராமங்களில் உள்ள விவசாயிகள், தங்கள் நிலங்களில், கடந்த ஜூன் மாதம், மானாவாரியாக, வேர்க்கடலை பயிரிட்டனர். கடந்த மாதம் இரண்டாவது வாரத்தில், இது அறுவடைக்கு தயாரானது. பொதுவாக, இந்த கால கட்டத்தில் மழை பெய்து, நிலங்கள் ஈரத்தன்மை கொண்டவையாக இருக்கும். எனவே, விவசாயிகள், வேர்க்கடலை செடிகளை எளிதாக பிடுங்கி, அறுவடை செய்வர்.ஆனால், இந்த ஆண்டு எதிர்பார்த்த மழை பெய்யவில்லை. இதனால், வேர்கடலையை பிடுங்க நிலத்தில் போதிய ஈரம் இல்லை. "ஒரு தூறல் போட்டால் போதும், வேர்க்கடலை அறுவடையை முடித்து விடலாம்' என, விவசாயிகள் எண்ணினர். ஆனால், மழை பெய்யவில்லை. இனியும் தாமதித்தால், வேர்க்கடலை விளைச்சல் பயன்தராது என்ற நிலையில், மண் வெட்டியால் கொத்தி, வேர்க்கடலை அறுவடையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

இது குறித்து விஷாரை சேர்ந்த விவசாயி ராஜேந்திரன் கூறியதாவது:மானாவாரி நிலங்களில் விதைக்கும்போது, வேர்க்கடலை அறுவடைக்கும் மழைதான் கை கொடுக்கும். ஆனால், மழை ஏமாற்றி விட்டது. இனியும் காத்திருந்தால், ஒரு படி வேர்கடலை கூட கிடக்காது என்பதால், மண்வெட்டியால் கொத்தி எடுக்கிறோம்.இவ்வாறு அவர் கூறினார்.

## எண்ணெய் வித்து பயிர் சாகுபடி: விவசாயிகளுக்கு பயிற்ச

செஞ்சி: செஞ்சி ஒன்றியம் மேல்எடையாளம் கிராமத்தில் விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை சார்பில் ஐசோபாம் எண்ணெய் வித்து பயிற்சி முகாம் நடந்தது.ஊராட்சி தலைவர் செல்வமணி தலைமை தாங்கினார். துணைத்தலைவர் ஆறுமுகம் முன்னிலை வகித்தார். துணை வேளாண் அலுவலர் சகாதேவன் வரவேற்றார்.மணிலா, எள், தென்னை போன்ற எண்ணை வித்துக்களை நவீன முறையில் சாகுபடி செய்யும் முறை, சந்தை வாய்ப்புகள் குறித்து வேளாண் உதவி இயக்குனர் சுகுமார் விளக்கினார்.உதவி விதை அலுவலர் செல்வராஜ், உதவி வேளாண்

அலுவலர்கள் மனுவேல், மாணிக்கம், ஆதிரை, ஜெயபாரதி ஆகியோர் சாகுபடி நுணுக்கங்களை விளக்கினர். இதில் முன்னோடி விவசாயிகள், கிராம பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## சம்பா சாகுபடி துவக்கம்

சங்கராபுரம்: சங்கராபுரம் பகுதியில் சம்பா சாகுபடியை விவசாயிகள் துவக்கியுள்ளனர்.சங்கராபுரம் பகுதியில் கோடை வெயிலின் தாக்கத்தால் நீர் நிலைகள் வறண்டிருந்த நிலையில் கடந்த வாரம் மழை பெய்தது. இதனால் ஆறு, ஏரி, குளங்களில் தண்ணீர் தேங்கியுள்ளது. விவசாய கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் விவசாயிகள் சம்பா சாகுபடி பணியை துவக்கியுள்ளனர்

## ஆத்தூரில் மஞ்சள் ஏலம்ரூ.70 லட்சம் வர்த்தகம்

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 70 லட்சம் ரூபாய்க்கு, மஞ்சள் வர்த்தகம் நடந்தது.ஆத்தூர் புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரந்தோறும் பருத்தி, மஞ்சள் மற்றும் எண்ணெய் வித்துகள் ஏலம் நடந்து வருகிறது.
அதன்படி, நேற்று முன்தினம், மஞ்சள் ஏலத்துக்கு, 400 விவசாயிகள், 2,100 மூட்டை மஞ்சளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதில், ஆத்தூர், ஈரோடு, திருப்பூர், கோவை பகுதியை சேர்ந்த, 20 மஞ்சள் வியாபாரிகள், மஞ்சள் விலை நிர்ணயம் செய்தனர்.அதில், விரலி மஞ்சள், ஒரு குவிண்டால் குறைந்தபட்சம், 4,000 ரூபாய், அதிகபட்சம், 6,899 ரூபாய், உருண்டை மஞ்சள் குறைந்தபட்சம், 3,000 ரூபாய், அதிகபட்சம், 5,700 ரூபாய், பனங்காலி மஞ்சள் குறைந்தபட்சம், பத்தாயிரம் ரூபாய், அதிகபட்சம், 12 ஆயிரம் ரூபாய் என, விற்பனையானதால், 70 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது.

## விவசாயிகளுக்குபயிற்சி முகாம்

நாமக்கல்: கொல்லிமலை, செம்மேடு வட்டார அரங்கில், அட்மா திட்டத்தின் கீழ், 50 விவசாயிகளுக்கு, மிகச்சிறு தானிய பயிர் சாகுபடி குறித்த பயிற்சி நடந்தது.
யூனியன் சேர்மன் சந்திரசேகரன் தலைமை வகித்து பேசினார். கொல்லிமலை வட்டார வேளாண் உதவி இயக்குனர் சௌந்தர்ராஜன், நெல் சாகுபடியில் கடைபிடிக்க வேண்டிய மாறுபட்ட தொழில் நுட்பம், திருந்திய நெல் சாகுபடி குறித்து பயிற்சி அளித்தார்.அட்மா வட்டார

தொழில்நுட்ப மேலாளர் சுரேஷ், பிரபு, தியாகராஜன், உதவி வேளாண் அலுவலர்கள் செல்லதுரை, கிருஷ்ணமூர்த்தி உட்பட பலர் பங்கேற்றனர்

## தாட்கோ மூலம் மானியத்துடன் கடன் உதவி பெற அவகாசம்

தர்மபுரி: தர்மபுரி தாட்கோ மூலம் மானியத்துடன் கடன் பெற வரும், 21ம் தேதி வரை கால அவகசாம் நீட்டிக்கப்பட்டுள்ளது.கலெக்டர் லில்லி வெளியிட்ட அறிக்கை:
தர்மபுரி தாட்கோ மூலம் மானியத்துடன் கடன் வழங்க முதல்வர், ஒரு கோடியே, 44 லட்ச ரூபாய் ஒதுக்கியுள்ளார்.மானியத்துடன் கூடிய இக்கடன் உதவி பெற விண்ணப்பிப்பவர்கள் இந்து ஆதிதிராவிடர்களாக இருக்க வேண்டும். கண்டிப்பாக, 18வயது நிரம்பியவர்களாக இருத்தல் வேண்டும். குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு, ஒரு லட்ச ரூபாய் ஆகும்.இத்திட்டதில் பயன்பெற விரும்புவர்கள் இணையதளம் மூலமாக ஆன்லைனில் பதிவு செய்யலாம். பதிவு செய்யும் போது குடும்ப அட்டை எண் அல்லது இருப்பிட சாண்று, சாதி சான்று, வருமானச் சான்று ஆகியவற்றின் எண், வழங்கப்பட்ட தேதி ஆகியவற்றை அதற்கான இடத்தில் அவசியம் பதிவு செய்ய வேண்டும்.திட்ட அறிக்கை பெறப்பட்ட தேதி ஆகியவற்றை அதற்கான இடத்தில் குறிப்பிட வேண்டும். புகைப்படத்தை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும். மாவட்டங்களுக்கு திட்ட வாரியாக ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையை தாண்டினால் அப்பதிவு ஏற்கப்படாது.ஒரு குடும்ப அட்டைஐயை வைத்து ஒரு குடும்பத்தில் ஒருவர் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். மகளிர் சுய உதவிக்குழு சுழல்நிதித் திட்டத்திற்கு விண்ணப்பிக்க விரும்பும் மகளிர் அனைவரும், 18வயது நிரம்பியவர்களாக இருக்க வேண்டும்.பரிசீலனைக்கு பின்னர் விண்ணப்பங்கள் வங்கிகளுக்கு அனுப்பப்படும். வங்கிகள் கடன் வழங்க உத்தரவாதம் தெரிவித்தவுடன் மானியம் வங்கிகளுக்கு விடுக்கப்படும். நிதி ஒதுக்கீடு மீதம் இருக்குமானால் விண்ணப்பங்கள் பின்னர் வரவேற்கப்படும்.மாவட்டங்களில் உள்ள ஆதிதிராவிட மக்கள் தொகைக்கு ஏற்ப திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் தர்மபுரி மாவட்டத்தில் தேவையான அளவிற்கு விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலம் வரப்பெற்றுள்ளன.
தர்மபுரி மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான சுழல்நிதி, பொருளாதார கடன் மற்றும் மருத்துவமனை துவக்குதல் திட்டங்களுக்கு விண்ணப்பங்கள் போதிய அளவில் வரப்பெறவில்லை

என்பதாலும் பொதுமக்களிடமிருந்து கால நீட்டிப்பு வேண்டும் என்ற கோரிக்கையினை ஏற்று வரும், 21ம் தேதி வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

## கம்போஸ்ட் உரங்களை பயன்படுத்த கிருஷ்ணகிரி விவசாயிகளுக்கு அறிவுரை

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பருவமழை பெய்ய தொடங்கியுள்ள நிலையில், விவசாயிகள் உரமான கம்போஸ்ட் உரங்களை பயன்படுத்தி அதிக விளைச்சலை பெறலாம்' என்று வேளாண் உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) பச்சையப்பன் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், இரண்டு லட்சம் ஹெக்டேரில் நெல், பயறு வகைகள், சிறுதானியங்கள், எண்ணைய் வித்து பயிர்கள், மலர் பயிர்கள், காய்கறிபயிர்கள், பழப்பயிர்கள் ஆகியவை சாகுபடி செய்யப்படுகிறது. மாவட்டதில் இயங்கி வரும், 125 தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலம், 30 கோடி ரூபாய் அளவுக்கு விவசாய கடன்கள் வழங்கி தானிய உற்பத்தி பெருக்கப்பட்டு வருகிறது.கடன் வழங்கும் போது இடுபொருட்களான விதைகள், யூரியா, டிஏபி, சூர்ப்பர் பாஸ்பேட், மற்றும் கலப்பு உரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் நிலையில் தற்போது, மாவட்டத்தில் பருவமழை பெய்ய தொடங்கியுள்ளதால், விவசாயிகள் இயற்க்கை உரங்களான கம்போஸ்ட் உரங்களை பயன்படுத்த வேண்டும்.கம்போஸ்ட் என்பது மக்கிய தாவர அல்லது விலங்குகளிடம் இருந்த பெறப்படும் கருமை நிற உரமாகும். இந்த உரத்தை மண்ணில் இடும்போது மண்ணின் தன்மை சீர்படுவதோடு மிக முக்கிய சத்துகள் பயிர்களுக்கு எடுத்து கொடுக்கப்படுகிறது. இந்த உரத்தை நடவுக்கு முன்னாலும், நடவுக்கு பின்பும் வயல்களில் இடலாம்.அனைத்து வகை பயிர்களுக்கும், மலைப்பயிற்களுக்கும் பழவகை பயிர்களுக்கும் , காய்கறிகளுக்கும் மற்றும் மரவகைகளுக்கும் கம்போஸ்ட் உரங்களை அவசியம் இட வேண்டும். கடந்த, 30 ஆண்டுகளாக ரசாயன உரங்களின் பயன்பாடு அதிகரித்து வருவதால், மண்ணில் அங்கக தண்மை குறைந்து மிகவும் உயிரற்ற மண் ஆகி வருவதால், அங்கக தண்மையை அதிகப்படுத்த கம்போஸ்ட் உரங்களை இடவேண்டும்.

கம்போஸ்ட் உரங்களை இடும்போது, மண்ணின் காற்றோட்ட வசதி கூடுகிறது. மண்ணின் அங்கக தன்மை உயர்வதால் மண்ணின் ஈரப்பதம், நீர்நிலை நிறுத்தும் தன்மை, மண்வளம் ஆகியவை அதிகரிக்கிறது. உயிர் உயரங்களாகிய அசோஸ்பைரில்லம், ரைசோபியம், பாஸ்போ பாக்டீரியாக்களின் வளர்ச்சி அதிகரிக்கிறது. மண்ணின் வெப்ப நிலை, அமில தன்மை ஆகியவை சீராக வைக்க உதவுகிறது. மண்ணின் ரசாய உரங்களை எளிதில் பயிரிக்கு எடுத்து கொடுக்கிறது.

எனவே, விவசாயிகள் அனைத்து வகை பயிர்களுக்கும் இயற்கை உரமான கம்போஸ்ட் உரத்தை இட்டு விளைச்சல் பெருக்கி அதிக லாபம் பெறலாம், என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## தமிழக முதல்வருக்குஅரிசி ஆலை உரிமையாளர்சங்கத்தினர் நன்றி அறிவிப்பு

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கக் கூட்டம், தலைவர் பக்கிரிசாமி தலைமையில் நடந்தது. துணைத்தலைவர் சண்முகானந்த வடிவேல், செயலாளர் சதீஷ் ஆனந்த், பொருளாளர் ஜெயக்குமார் உள்பட நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.கூட்டத்தில், டெல்டா மாவட்டங்களில் குறுவை பருவ நெற்பயிர் சாகுபடி பொய்த்து விட்டது. இந்நிலையில், 25 அரவை ஆலை தொழிலாளர்களின் குடும்பத்தினர் நலிவடைந்து விடாமல் இருக்க, தமிழக முதல்வர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதன்படி, சட்டீஸ்கர் மற்றும் வட மாநிலங்களில் நெல் பெற்று, அரவை ஆலைகளுக்கு கொடுத்து, அதில் கிடைக்கும் தரமான அரிசியை ரேஷனில் இலவசமாக வழங்க, அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதற்காக, அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.மேலும், ரேஷனில் அரசு இலவச அரிசியை வழங்கும் திட்டத்தை செயல்படுத்தும் வகையில், தமிழக அரசு மற்றும் தமிழ்நாடு அரிசி ஆலை உரிமையாளர்கள் சம்மேளனம் எடுக்கும் அனைத்து முயிற்சிகள், நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருப்பது என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.தஞ்சை மாவட்ட பொருளாளர் ஜெயக்குமார் நன்றி கூறினார்.

## பயிர் காப்பீடு கருத்தரங்கு

அருப்புக்கோட்டை: அருப்புக்கோட்டை அருகே கோவிலாங்குளத்தில், வேளாண்., அறிவியல் மையத்தில், விவசாயிகளுக்கான பயிர் காப்பீட்டு திட்ட பயிற்சி நடந்தது. பேராசிரியர் பால் பாண்டி தலைமை வகித்தார். உதவி பேராசிரியர் ராஜேந்திரன் வரவேற்றார். இன்சூரன்ஸ் நிர்வாக அலுவலர் லட்சுமணன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சண்முகநாதன், உதவி பேராசிரியர் ராமகிருஷ்ணன் பேசினர். பயிர் காப்பீட்டு திட்ட விதிகள், எந்த நிலைகளில் பயிருக்கு இழப்பீடு வழங்கப்படும், பிரிமியம் பற்றி விபரங்கள் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. விவசாயிக ளின் சந்தேகங்கள் தெளிவுபடுத்தப்பட்டன. அக்ரிகல்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா மற்றும் வேளாண். அறிவியல் மையமும் இணைந்து கருத்தரங்கினை நடத்தின.

## கோகோ சாகுபடிக்கு மானியம்

லாலாப்பேட்டை: கோகோ சாகுபடி குறித்த விளக்கக்கூட்டம் உள் வீரராக்கியத்தில் நடந்தது.கிருஷ்ணராயபுரம் வட்டார தோட்டக்கலை துறை சார்பில், கோகோ சாகுபடி குறித்த விளக்க கூட்டம், உள்வீரராக்கியத்தில் நடந்தது. கூட்டத்தில், வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் பேசியதாவது:தென்னையில் ஊடுபயிராக கோகோ செடி நடவு செய்ய, ஒரு ஹெக்டருக்கு, 12 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள செடி, உரம் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் மானியமாக வழங்கப்படுகிறது.

கோகோ செடிகள் நடவு செய்த, மூன்றாவது ஆண்டில் இருந்து, காய்கள் காய்க்கத் துவங்கும். ஒவ்வொரு மரத்திலும் சராசரியாக, ஒன்று முதல், இரண்டு கிலோ வரை உலர் விதைகள் கிடைக்கும். விதைகள் சாக்லெட் தயாரிக்க, காட்பாரிஸ் நிறுவனம் கொள்முதல் செய்து கொள்ளும். கோகோ இலைகள் ஆண்டுக்கு, 800 முதல், 1,000 கிலோ வரை உதிர்ந்து, மக்கிய உரமாக தென்னை மரத்துக்கு கிடைக்கிறது.இவ்வாறு அவர் பேசினார்.பஞ்சாயத்து தலைவர் மகாமுனி, காட்பாரிஸ் சாக்லேட் நிறுவன கள அலுவலர் பாலாஜி, உதவி வேளாண்மை அலுவலர் மூக்கையன் மற்றும் விவசாயிகள் பலர் பங்கேற்றனர்

## கால்நடை தீவனங்கள் விலை அதிகரிப்பு



சேலம்: தமிழகத்தில், மாட்டுத் தீவனங்களின் விலை உயர்ந்துள்ளதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.சேலம் மாவட்டத்தில், ஆத்தூர், வாழப்பாடி, ஜலகண்டாபுரம், நங்கவள்ளி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், கறவை மாடுகளை நம்பி, ஏராளமான விவசாயிகள் பிழைப்பு நடத்தி வருகின்றனர்.

அரிசி ஆலைகள் கறவை மாடுகளுக்கு, புண்ணாக்கு, தவிடு ஆகியவை உணவாக வழங்கப்படுகின்றன. சேலம் மாநகரத்திற்கு உட்பட்ட, பள்ளப்பட்டி பகுதியில், ஏராளமான

எண்ணெய் மற்றும் அரிசி ஆலைகள் உள்ளன. இங்கு தயாராகும் புண்ணாக்கு, தவிடு ஆகியவை, சேலம், மேட்டூர், நாமக்கல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.கடந்த இரண்டு மாதங்களுக்கு முன், 70 கிலோ கொண்ட, ஒரு மூட்டை புண்ணாக்கு 1,800 - 2,000 ரூபாயாக இருந்தது.இது, தற்போது, 2,800 - 3,000 ரூபாயாக உயர்ந்துள்ளது. தவிடு மூட்டை (100 கிலோ) விலை, 800 ரூபாயில் இருந்து, 1,200 - 1,300 ரூபாயாக அதிகரித்து விட்டது. இதுகுறித்து, கறவை மாடு வளர்ப்பாளர் சேகர் கூறியதாவது:ஆரம்பத்தில், மேய்ச்சல் நிலம் அதிகளவில் இருந்தது. கறவை மாடுகளை மேய்ச்சலுக்கு அனுப்புவதன் மூலம், தவிடு, புண்ணாக்கு ஆகியவற்றின் பயன்பாடு குறைவாக இருக்கும். சமீபகாலமாக, மேய்ச்சல் நிலம் அனைத்தும், வீட்டு மனைகளாக உருவெடுத்துள்ளன.அதனால், புல்வெளிகளை காண்பது அரிதாக உள்ளது. எனவே, தவிடு, புண்ணாக்கு ஆகியவற்றிற்கான தேவை அதிகரித்துள்ளது. இரண்டு மாதங்களுக்கு முன் இருந்ததை காட்டிலும், தற்போது, மாட்டுத் தீவனங்களின் விலை மிகவும் உயர்ந்துள்ளது. எண்ணெய்க்கு தேவையான கடலை, தவிட்டுக்கு தேவையான நெல் ஆகியவற்றின் உற்பத்தியில், கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மழை பொழிவு குறைந்ததால், ஆலைகளுக்கு அவற்றின் வரத்து குறைவாக உள்ளது. கடலை, நெல் ஆகியவற்றை மூலப்பொருட்களாக கொண்டு தயாரிக்கப்படும், புண்ணாக்கு மற்றும் தவிடு, ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.அதனால், விலையை உயர்த்தியுள்ளதாக ஆலைகள் தெரிவிக் கின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

## நாட்டின் இயற்கை ரப்பர் பயன்பாடு 6 சதவீதம் வளர்ச்சி



புதுடில்லி: நடப்பு 2012-13ம் நிதியாண்டின் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான ஆறு மாத காலத்தில், நாட்டின் இயற்கை ரப்பர் பயன்பாடு 6 சதவீதம் அதிகரித்து, 5.02 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இது, சென்ற 2011-12ம் நிதியாண்டின் இதே காலத்தில், 4.76 லட்சம் டன்னாக

இருந்தது.

மேலும், நாட்டின் இயற்கை ரப்பர் உற்பத்தி, 1 சதவீதம் உயர்ந்து, 3.91 லட்சம் டன்னிலிருந்து, 3.96 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது என, ரப்பர் வாரியத்தின் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.மதிப்பீட்டு காலத்தில், இயற்கை ரப்பர் இறக்குமதி, 24 சதவீதம் அதிகரித்து, 91,186 டன்னிலிருந்து, 1.13 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. அதேசமயம், நாட்டின் இயற்கை ரப்பர் ஏற்றுமதி, 59 சதவீதம் சரிவடைந்து, 18,083 டன்னிலிருந்து, 7,466 டன்னாக வீழ்ச்சி கண்டுள்ளது.நடப்பாண்டு செப்டம்பர் மாதத்தில் மட்டும், இயற்கை ரப்பர் பயன்பாடு 9 சதவீதம் வளர்ச்சி கண்டு, 81,500 டன்னாக அதிகரித்துள்ளது. இது, கடந்த 2011ம் ஆண்டு இதே மாதத்தில், 74,870 டன்னாக இருந்தது. இதே காலத்தில், இயற்கை ரப்பர் உற்பத்தி,

2 சதவீதம் அதிகரித்து, 80,200 டன்னிலிருந்து, 82 ஆயிரம் டன்னாக வளர்ச்சி கண்டுள்ளது. மேலும், இயற்கை ரப்பர் இறக்குமதி, 16 சதவீதம் அதிகரித்து, 12,763 டன்னிலிருந்து, 14,779 டன்னாக உயர்ந்துள்ளது.அதேசமயம், இயற்கை ரப்பர் ஏற்றுமதி 78 சதவீதம் சரிவடைந்து, 4,785 டன்னிலிருந்து, 1,053 டன்னாக குறைந்துள்ளது.சென்ற செப்டம்பர் மாதம் வரையிலான காலத்தில், நாட்டின் இயற்கை ரப்பர் கையிருப்பு, 2.25 லட்சம் டன்னாக உள்ளது.நாட்டின் மொத்த இயற்கை ரப்பர் பயன்பாட்டில், @மாட்டார் வாகன டயர் தயாரிப்பு நிறுவனங்கள் அதிக பங்களிப்பை கொண்டுள்ளன. சர்வதேச சந்தையில், விலை குறையும்@போது இந்நிறுவனங்கள் ரப்பரை அதிக அளவில் இறக்குமதி செயய்து கொள்கின்றன.

கடந்த ஆண்டு, உள்நாட்டில் ரப்பர் விலை, சர்ர்வதேச சந்தைவிலையை விட அதிகமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**கரும்பு டன்னுக்கு ரூ.4000 அரசு வழங்க வேண்டும்**



தர்மபுரி : தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில் கரும்பு விவசாயிகள் மாநில மாநாடு நேற்று தர்மபுரியில் நடந்தது. மாநில தலைவர் சின்னசாமி தலைமை தாங்கினார்.

இதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: உர விலை 300% உயர்ந்துள்ளது. 2012,13ம் ஆண்டுக்கான கரும்பு அரவை பருவத்திற்கு முன்னதாக அரசு முத்தரப்பு கூட்டத்தை கூட்டி கரும்பு டன்னுக்கு ரூ.4 ஆயிரம் வழங்க வேண்டும். கூட்டுறவு தேர்தலை நடத்த புதிய உறுப்பினர் சேர்க்கையை கைவிட வேண்டும். கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பு அனுப்பும் விவசாயிகளை மட்டுமே உறுப்பினராக சேர்க்க வேண்டும். சர்க்கரை ஆலை வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடாக ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் வழங்க வேண்டும்.

வறட்சி, நோய் தாக்குதலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு மற்றும் பயிர் கடனை ரத்து செய்ய வேண்டும். தமிழகத்திற்கு தண்ணீர் தர மறுக்கும் மாநிலங்கள் மீது மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயத்திற்கு சீரான மின்சாரம் வழங்க வேண்டும். இந்த

கோரிக்கைகளை வலியுறுத்தி நவம்பர் 19ம் தேதி அனைத்து சர்க்கரை ஆலைகளின் முன் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 66 அடியானது 14 நாளுக்கு மட்டுமே தண்ணீர்**



மேட்டூர் : மேட்டூர் அணையின் நீர்மட்டம் 65.80 அடியாக குறைந்துள்ளது. இதனால் அணையில் இருந்து பாசனத்திற்கு இன்னும் 14 நாட்களுக்குத்தான் தண்ணீர் திறக்க முடியும் என்பதால், சம்பா நெல் பயிரை காப்பாற்ற முடியுமா என்ற கேள்வி விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது. கர்நாடக அணைகளிலிருந்து தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டு உள்ளதால் மேட்டூர் அணைக்கு வந்த நீரின் அளவு வெகுவாக குறைந்து விட்டது. நேற்று முன்தினம் மாலை அணைக்கு விநாடிக்கு 2,861 கனஅடியாக வந்து கொண்டிருந்த தண்ணீர், நேற்று மாலை விநாடிக்கு 1,362 கனஅடியாக குறைந்தது.

அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு நேற்று மாலை விநாடிக்கு 18,178 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. நீர்வரத்தை காட்டிலும், திறப்பு அதிகமாக உள்ளதால் அணை நீர்மட்டம் மளமளவென்று குறைந்து வருகிறது. நேற்று முன்தினம் மாலை 67.64 அடியாக இருந்த அணை நீர்மட்டம், நேற்று மாலை 65.80 அடியாக குறைந்தது. நேற்று முன்தினம் மாலை 30.70 டிஎம்சியாக இருந்த அணை நீர் இருப்பு, நேற்று மாலை 29.19 டிஎம்சியாக சரிந்தது. நாளொன்றுக்கு ஒன்றரை டிஎம்சி அளவிற்கு டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுகிறது.

மேட்டூர் அணை நீர் தேக்கத்தில் உள்ள மீன் வளம் மற்றும் குடிநீர் தேவைகளுக்காக 10 டிஎம்சி அளவிற்கு தண்ணீர் இருப்பு வைக்க வேண்டும். சம்பா சாகுபடிக்கு மொத்தம் 120 டிஎம்சி அளவிற்கு தண்ணீர் தேவைப்படும். கடந்த மாதம் 17ம் தேதி முதல் மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு மொத்தம் 34.18 டிஎம்சி அளவிற்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

மேலும், அணை நீர்மட்டம் நாள் ஒன்றுக்கு 2 அடி வரை குறைந்து வருகிறது. இதேநிலை நீடித்தால் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு இன்னும் 14 நாட்களுக்கு மட்டுமே தண்ணீர் திறக்க முடியும் என்ற சூழ்நிலை உருவாகி உள்ளது. இதனால் சம்பா சாகுபடி கேள்விக்குறியாகி உள்ளது.

**இன்னும் 3 ஆண்டுகளில் டிராக்டர்கள் தேவை 8.6 லட்சமாக உயரும்**




புதுடெல்லி : நாட்டில் தற்போது ஆண்டுக்கு 5 லட்சம் டிராக்டர்களுக்கு தேவை உள்ளது. 2015ம் ஆண்டில் 8.6 லட்சம் டிராக்டர்களுக்கு தேவை ஏற்படும் என்று அசோசெம் கணிப்பு தெரிவிக்கிறது. "கிராமப்புற மேம்பாட்டு திட்டங்கள் மூலம் அதிக அளவு பணம் வழங்கப்படுவதால் விவசாயிகளிடம் பணப்புழக்கம் அதிகரித்துள்ளது. ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் பணம் வழங்கப்படுவதால் விவசாயிகளிடம் பணப்புழக்கம் அதிகரித்துள்ளது.

இதனால் விவசாய உபகரணங்களை அதிகளவில் வாங்க விவசாயிகள் முன்வருகின்றனர். இதுவும் டிராக்டர் உற்பத்தித் துறை ஏற்றம் பெற உதவி செய்துள்ளது" என்று அசோசெம் பொதுச்

செயலாளர் டி.எஸ்.ரவத் கூறினார். வங்கிகள் மூலம் சுலபமாக டிராக்டர் கடன் கிடைப்பதும், அதை கிசான் கிரெடிட் கார்டுகளின் அடிப்படையில் வழங்குவதும் டிராக்டர் வாங்கும் போக்கை அதிகரிக்க செய்துள்ளது என்று அசோசெம் ஆய்வு தெரிவி

## 2013ம் ஆண்டில் ஆந்திராவில் உலக விவசாய மாநாடு



ஐதராபாத் : ஆந்திராவில் அடுத்த ஆண்டு உலக விவசாய மாநாடு நடைபெற உள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை உலக விவசாய மாநாடு நடத்தப்படுகிறது. அடுத்த ஆண்டு நவம்பரில், முதல் முறையாக இம்மாநாடு இந்தியாவில் நடக்கிறது. ஆந்திரா மாநிலத்தில் இது நடத்தப்படுவதால், அம்மாநில அரசு இதற்காக அமைச்சர்கள் குழுவை நியமித்துள்ளது.

இக்குழு நேற்று முன் தினம் கூடி ஆலோசனை நடத்தியது. இதில், மாநில விவசாயத் துறை அமைச்சர் கன்னா லட்சுமிநாராயணா, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பொன்னால லட்சுமய்யா, விவசாயத் துறை செயலாளர் ஜானையா, விஞ்ஞானி என்.ஜி.ரங்கா உள்ளிட்டோர் பங்கேற்றனர். மாநாடு தொடர்பாக, வரும் 24ம் தேதியன்று அனைத்து மாநில விவசாயத் துறை அமைச்சர்கள் கூட்டத்தை கூட்டி விவாதிக்க திட்டமிடப்பட்டது.

## குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூள் விலை சரிவு



ஐதராபாத் : ஆந்திராவில் அடுத்த ஆண்டு உலக விவசாய மாநாடு நடைபெற உள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை உலக விவசாய மாநாடு நடத்தப்படுகிறது. அடுத்த ஆண்டு நவம்பரில், முதல் முறையாக இம்மாநாடு இந்தியாவில் நடக்கிறது. ஆந்திரா மாநிலத்தில் இது நடத்தப்படுவதால், அம்மாநில அரசு இதற்காக அமைச்சர்கள் குழுவை நியமித்துள்ளது.

இக்குழு நேற்று முன் தினம் கூடி ஆலோசனை நடத்தியது. இதில், மாநில விவசாயத் துறை அமைச்சர் கன்னா லட்சுமிநாராயணா, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பொன்னால லட்சுமய்யா, விவசாயத் துறை செயலாளர் ஜானையா, விஞ்ஞானி என்.ஜி.ரங்கா உள்ளிட்டோர் பங்கேற்றனர். மாநாடு தொடர்பாக, வரும் 24ம் தேதியன்று அனைத்து மாநில விவசாயத் துறை அமைச்சர்கள் கூட்டத்தை கூட்டி விவாதிக்க திட்டமிடப்பட்டது.

## ஆலை ஆட்சியர் தகவல் கோமுகி சர்க்கரை ஆலையில் 18ல் கரும்பு அரவை துவக்கம்

சின்னசேலம், : கச்சிராயபாளையம் கோமுகி சர்க்கரை ஆலை ஆட்சியர் சிவமலர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

விழுப்புரம் மாவட்டம் கச்சிராயபாளையம் கோமுகி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2012-2013ம் ஆண்டுக்கான கரும்பு அரவை பருவம் வரும் 18ம் தேதி தொடங்குகிறது. இவ்விழாவில் அமைச்சர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்கின்றனர். ஆலையின் முழு அரவைத் திறனான 4.30 லட்சம் டன் கரும்பு அரவை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

கடும் எச்சரிக்கைக்கு பிறகும் பதிவு செய்யப்பட்ட, படாத கரும்புகள் கடத்தப்படுவதாக தெரிகிறது. கடந்த 4ம் தேதி கரும்பு கடத்தலில் ஈடுபட்ட ஒரு லாரியை அதிகாரிகள் பறிமுதல் செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் அளித்த தீர்ப்பில் 'பதிவு இல்லாத கரும்பு வைத்திருக்கும் விவசாயிகள் கூட சம்பந்தப்பட்ட எல்லையில் இருக்கும் சர்க்கரை ஆலையில் தடையில்லா சான்று பெற்ற பிறகே எடுத்து செல்ல வேண்டும் என உத்தரவிட்டுள் ளது.

ஆகையால் ஆலைக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட, படாத கரும்பு விவசாயிகள் ஆலையின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு முழு அரவை திறனை எட்டும் வகையில் கரும்பு முழுவதையும் அனுப்ப வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## உபரி நீர், மழையின்றி சுள்ளன் ஆறு வறண்டது தரிசாக மாறி விடுமோ 2,500 ஏக்கர் அச்சத்தில் விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள்

வலங்கைமான், : உபரி நீர் அல்லது மழையால் தண்ணீர் வரும் சுள்ளன் ஆறு வறண்டுகிடக்கிறது. இதனால் அப்பகுதிகளில் 2,500க்கும் மேற்பட்ட ஏக்கர் தரிசாகும் வாய்ப்புள்ளதாக விவசாயிகள் வருந்துகின்றனர்.

திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் பகுதியில் வெட்டாறு மற்றும் குடமுருட்டி ஆறுகளுக்கு இடையே ஓடுகிறது சுள்ளன் ஆறு. இது அப்பகுதியில் உள்ள முக்கிய பாசனம் மற்றும் வடிகால் ஆறு. இந்த ஆற்றின் நீளம் 18 கிமீ. சுள்ளன் ஆறு பொய்கை ஆறு என்றும் அழைக்கப்படுகிறது. இது பாபநாசம் தாலுகா அகரமாங்குடி அடுத்த புரசக்குடி என்ற பகுதியில் சிறு வடிகால் வாய்க்காலாக தோன்றி வலங்கைமான் பகுதி வெட்டாற்றில் முடிகிறது. முடிவில் 40 மீ அகலம் கொண்ட ஆறாக உள்ளது. சுள்ளன் ஆற்றில் பாபநாசம் ஒன்றியத்தில் புரசக்குடி, நாவலடி,

ஓலப்பச்சேரி ஆகிய பகுதிகளில் உள்ள ரெகுலேட்டர், வலங்கைமான் ஒன்றியத்திற்கு உட்பட்ட அவிச்சாக்குடி, ஆவூர், குளக்குடி, நரசிங்கமங்கலம் உள்ளிட்ட ரெகுலேட்டர் என 7 ரெகுலேட்டர்கள் பாசனத்திற்காக அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அகரமாங்குடி, அவிச்சாகுடி, ஆவூர்-சாளுவம்பேட்டை, கோவிந்தகுடி, வீராணம், மேல நல்லம்பூர், கீழ நல்லம்பூர், குளக்குடி, தொழுவூர் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த 2,500 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது.
நல்லூர், இனாம் கிளியூர், கோவிந்தகுடி, சந்திரசேகரபுரம், ஆதிச்சமங்கலம், விருப்பாட்சிபுரம், வலங்கைமான் போன்ற கிராமங்களுக்கு முக்கிய வடிகாலாக சுள்ளன் ஆறு விளங்குகிறது.
சுள்ளன் ஆற்றிற்கு மேட்டூரில் இருந்து நீர் வரக்கூடிய முக்கிய பாசன ஆறுகளில் இருந்து நேரடியாக இதுவரை இணைப்பு எதுவும் இல்லை. டெல்டா மாவட்டங்களில் காவிரி கோட்டத்தின் கீழ் உள்ள குடமுருட்டி ஆறு, வெண்ணாறு கோட்டத்தின் கீழ் உள்ள வெட்டாறு ஆகியவற்றில் அதிகமாக நீர் வரும்போது பாசனத்திற்கு போக எஞ்சிய உபரி நீர்தான் சுள்ளன் ஆற்றை நிரப்பும் அல்லது மழைக்காலங்களில் தேவைக்கு அதிகமான உபரி நீர் விவசாயிகளால் வடிய விடுகின்றபோது சுள்ளன் ஆறு நிரம்பும்.
டெல்டா மாவட்டத்தில் மற்ற இடங்களில் 3 போக சாகுபடி நடைபெற்றாலும் இப்பகுதியில் ஒரு போக சாகுபடிதான் நடைபெறுகிறது. உபரி நீருக்காகவும், மழை நீருக்காகவும் தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களைச் சேர்ந்த பாபநாசம், வலங்கைமான், குடவாசல் என 3 ஒன்றியங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான விவசாயிகள் மற்றும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாய கூலித்தொழிலாளர்கள் காத்திருக்கின்றனர்.
பாசன வசதிக்காக வாய்க்கால்கள் மற்றும் ஆறுகள் பல்வேறு இடங்களில் மாற்றி அமைக்கப்பட்டும், சுள்ளன் ஆறு மட்டும் துவக்கத்தில் வடிவமைக்கப்பட்டது போலவே தற்போதும் உள்ளது. விவசாயிகளின் தேவை அறிந்து பாசன ஆறுகளோடு மாற்றி சுள்ளன் ஆற்றை அமைக்காததால் இப்பகுதியில் உள்ள விளை நிலங்கள் பாதிக்கப்படுகிறது.
இதுகுறித்து ஆவூர் சாளுவம்பேட்டை பகுதியை சேர்ந்த விவசாயி கோவிந்தராஜன் கூறுகையில், ‘சுள்ளன் ஆற்றில் போதிய அளவு நீர் வராததால், இப்பகுதிகளில் 2,500 ஏக்கர் தரிசாக கிடக்கிறது. மின் தட்டுப்பாட்டாலும், ஆற்றில் தண்ணீர் வராததாலும் இப்பகுதிகளில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. ஆவூர் சாளுவம்பேட்டை, கோவிந்தகுடி பகுதிகளில் வெற்றிலை கொடிக்கால்கள் சாகுபடி செய்யப்படும். தண்ணீர் வராததால் வெற்றிலை சாகுபடியும் பாதிக்கும் சூழ்நிலை உள்ளது‘ என்றார்.
ஆவூர் பகுதியை சேர்ந்த வரதராஜன் கூறுகையில்,

‘சுள்ளன் ஆற்று பாசன பகுதியில் விவசாயப் பணிகள் நடைபெறாததால் விவசாயிகள் மற்றும் விவசாயக்கூலி தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே அனைத்துப் பகுதிகளையும் போல இப்பகுதிகளிலும் பாசனம் நடைபெற அரசு நடவடிக்கை எடுத்து விவசாயிகள் மற்றும் விவசாய கூலி தொழிலாளிகளை காக்க வேண்டும்‘ என்றார்.

நரசிங்கமங்கலம் பகுதியை சேர்ந்த அகோரம் கூறுகையில்,

‘சுள்ளன் ஆற்று பாசனத்தின் மூலம் ஒரு போக சாகுபடியே மேற்கொள்ளப்பட்டது. மழைக்காலங்களில் தேவைக்கு அதிகமாக வரும் உபரி நீரால் பல ஆண்டு சித்தன்வாழூர், நரசிங்கமங்கலம், நல்லம்பூர் போன்ற பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டிருந்த விளை நிலங்கள் பாதிப்படுகிறது. எனவே காலத்தோடு சாகுபடி செய்தால் மட்டுமே ஓரளவாவது இப்பகுதி விவசாயத்தை காக்க முடியும். இந்நிலையில் இதுவரை சுள்ளன் ஆற்றில் தண்ணீர் வராததால் விவசாய பணிகள் துவங்காத நிலையில் எப்போது தண்ணீர் வரும். எப்போது மழை பெய்யும் என விவசாயிகள் உபரி நீருக்காகவும், மழைக்காகவும் காத்திருக்கின்றனர்‘ என்றார்.

எல்லா ஆறுகளிலும் விடுவது போல் தண்ணீர் வேண்டும்

வீராணம் பகுதியை சேர்ந்த விவசாயி மணிசேகரன் கூறுகை யில்,‘ஆவூர் ரெகுலேட்டர்கள் மூலம் வீராணம், பூண்டி, ஆவுடையாநத்தம், வடுவக்குடி, மேலநல்லம்பூர், ராஜாகருப்பூர், கோவிந்தகுடி, ஆவூர்-சாளுவம்பேட்டை பகுதி உள்பட 750 ஏக்கர் பாசனம் பெறுகிறது. சுள்ளன் ஆற்றில் இதுவரை தண்ணீர் வராததால் சாகுபடி பணிகள் முற்றிலும் முடங்கி உள்ளது. ஒரு சில விவசாயிகள் மட்டும் மின் மோட்டார்கள் மூலம் மிகமிக குறைந்த அளவே விவசாயம் செய்துள்ளனர்.

எனவே உடனடியாக சுள்ளன் ஆற்றிற்கு போதிய அளவு பாசனத்திற்கு குடமுருட்டி ஆற்றில் இருந்து தண்ணீர் திறந்துவிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து ஆறுகளிலும் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கும்போது சுள்ளன் ஆற்றில் நல்லூர் பகுதியில் குடமுருட்டி ஆற்றில் இருந்து பிரிந்து வரும் ஆவூர் வாய்க்காலில் காருகுடி பிரிவு வாய்க்கால் அருகே ரெகுலேட்டர் அமைக்க வேண்டும். பின்னர் அந்த வாய்க்கால் மூலம் சுள்ளன் ஆற்றிற்கு பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும். இதுகுறித்து அமைச்சர் காமராஜ் நடவடிக்கை எடுக்க வேண்டும்‘ என்றார்.

## காரைக்குடி உழவர்சந்தையில் சின்ன வெங்காயம் அதிரடி விலை உயர்வு கிலோ ரூ35க்கு விற்பனை

காரைக்குடி, : காரைக் குடி உழவர்சந்தையில் சின்ன வெங்காயம் நேற்று கிலோ ரூ.35க்கு விற்பனை செய்யப்பட்டது. சோயா பீன்ஸ், கேரட் உள்ளிட்ட இங்கிலீஷ் காய்கறிகளின் விலையும் அதிகரித்துள்ளன.

காரைக்குடி உழவர்சந்தையில் கடந்த 2 வாரங்களாக சின்ன வெங்காயம் கிலோ ரூ.30க்கு விற்பனையானது. நேற்று சின்ன வெங்காயம் கிலோ ரூ.35க்கு விற்கப்பட்டது. கடந்த வாரம் வரை கிலோ ரூ.60க்கு விற்பனையான சோயா பீன்ஸ் நேற்று கிலோ ரூ.80க்கும், ரூ.28க்கு விற்கப்பட்ட கேரட் ரூ,32க்கும் விற்பனை செய்யப்பட்டது. முள்ளங்கி, காலி பிளவர், பீட்ரூட், பட்டர்பீன்ஸ், முட்டைக்கோஸ் உள்ளிட்ட இங்கிலீஷ் காய்கறிகளின் விலையும் நேற்று உயர்ந்திருந்தது.

உழவர்சந்தையில் நேற்று மற்ற காய்கறிகளின் விலை (கிலோ, ரூபாயில்) விபரம்: தக்காளி 8, பெரிய வெங்காயம் 16, சின்ன வெங்காயம் 35, உருளை 30, அவரை 40, பீன்ஸ் 40, கேரட் 32, கத்தரி 40, வெண்டை 28, பாகற்காய் 28, முள்ளங்கி 20, முட்டைக்கோஸ் 16, பீட்ரூட் 16, சோயாபீன்ஸ் 80, பட்டர்பீன்ஸ் 80, பச்சை மிளகாய் 25, இஞ்சி 40, காலி பிளவர் (ஒன்று) 20, புடலங்காய் 20, கொத்தவரங்காய் 20, வாழைக்காய் (ஒன்று) 2, தேங்காய் (ஒன்று) 8, முருங்கைக்காய் 20, எலுமிச்சை (ஒன்று) 3, கருணைக்கிழங்கு 40, சேனைக்கிழங்கு 30, புதினா 20, மல்லி 30, கருவேப்பிலை 20, காளான் (ஒரு பாக்கெட்) 35.

பழங்கள் விலை விபரம்: ஆப்பிள் 120, சாத்துக்குடி 40, சீத்தாபழம் 40, காபூல் மாதுளை 140, மால்டோ ஆரஞ்சு 100, நாக்பூர் ஆரஞ்சு 50, அன்னாசி 30, பப்பாளி 30, திராட்சை 60, பேபிகார்ன் 30, ஸ்வீட் கார்ன் 13.

## தென்னையில் ஊடுபயிராக கோகோ செடி பயிரிட்டால் கூடுதல் வருமானம் கிடைக்கும் விவசாயிகளுக்கு அறிவுரை

கிருஷ்ணராயபுரம், : தென்னையில் ஊடுபயிராக கோகோ செடி பயிரிட்டால் கூடுதல் வருமானம் கிடைக்கும் என்று விவசாயிகளுக்கு கிருஷ்ணராயபுரம் வட்டார தோட்டக்கலைத்துறை உதவி

இயக்குனர் ராஜேந்திரன் அறிவுரை கூறியுள்ளார்.

கிருஷ்ணராயபுரம் அருகே உள்ள வீரராக்கியத்தில் தோட்டக்கலைத் துறை சார்பில் தென்னையில் ஊடுபயிராக கோகோ பயிர் சாகுபடி செய்வது குறித்து ஆலோசனை கூட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது. பால்ராஜபுரம் ஊராட்சி தலைவர் மகாமுனி தலைமை வகித்தார்.

இதில் கிருஷ்ணராயபுரம் வட்டார தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன் பேசுகையில், தென்னையில் ஊடுபயிராக கோகோ செடி நடவு செய்திடும் திட்டம் நடப்பாண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. விவசாயிகள் ஒரு எக்டேரில் கோகோ சாகுபடி செய்திட ரூ.12,000 மதிப்புள்ள செடி, உரம் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் மானியமாக வழங்கப்படுகிறது. நடப்பாண்டில் கிருஷ்ணராயபுரம் வட்டாரத்திற்குள் கோகோ சாகுபடி செய்திட 75 ஏக்கர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. செடிகள் நடவு செய்து 3 ஆண்டுகளுக்கு பின்னர் காய்கள் காய்க்க துவங்கும். ஒவ்வொரு செடியில் இருந்தும் ஒரு கிலோ முதல் 2 கிலோ வரை உலர் விதைகள் கிடைக்கும். இந்த விதைகளை சாக்லெட் தயாரிக்கும் காட்பரிஸ் நிறுவனம் கொள்முதல் செய்கிறது.

கோகோ பயிரை ஊடுபயிராக சாகுபடி செய்வதால் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கும். இவற்றின் இலைகள் வருடத்திற்கு எக்டேருக்கு 800 முதல் 1000 கிலோ வரை உதிர்ந்து மக்கிய உரமாக தென்னைக்கு கிடைக்கிறது. மண்ணில் ஈரப்பதத்தையும் காக்கிறது. தென்னந்தோப்புகளில் களைகளும் கட்டுப்படுத்தப்படுகிறது. இவ்வாறு தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன் பேசி னார். கூட்டத்தில் காட்பரிஸ் நிறுவனத்தின் கள அலுவலர் பாலாஜி, கோகோ விதைகள் கொள்முதல் செய்யும் விதம், பயிர் சாகுபடிக்கு செடிகள் வாங்குவது குறித்து விளக்கமளித்தார். கோகோ சாகுபடி குறித்து படக்காட்சிகள் மூலம் விளக்கப்பட்டது. இதில் ஏராளமான தென்னை விவசாயிகள் கலந்து கொண்டனர். முடி வில் தோட்டக்கலைத்துறை உதவி வேளாண்மை அலுவலர் மூக்கையன் நன்றி கூறினார்.

## ஆவின் பால் மின்வெட்டால் பாழ் தினமும் 1 லட்சம் லிட்டர் திரிந்து வீண்

மதுரை, : தமிழக அரசின் மதுரை ஆவின் பால் நிறுவனம், தினமும் பொது மக்களுக்கு பாக்கெட் பால் சப்ளை செய்கிறது. அன்றாடம் பால் உற்பத்தியாளர்களிடம் கொள்முதல் செய்யப்படும் பால், ஆவின் நிறுவனத்திற்கு கொண்டு வரப்பட்டு, குளிரூட்டல் முறையில் கெட்டுப்போகாமல் பதப்படுத்தப்படும். இதன் பிறகு 500 மி.லி, 250 மி.லி. பாலித்தீன் பாக்கெட்டுகளில் அடைத்து, மறுநாள் அதிகாலையில் மதுரை நகர் மற்றும் புறநகர் முழுவதுமுள்ள விற்பனை நிலையங்களுக்கு

லாரிகளில் ஏற்றி அனுப்பப்படுகின்றன. அதுவரை பால், நிறுவனத்திலுள்ள கூலிங் அறையில் இருக்கும். ஏனென்றால் ஆவின் நிறுவனத்தில் இருந்து சப்ளைக்கு அனுப்பிய பிறகு நான்கு அல்லது ஐந்து மணி நேரம் கழித்துதான் பொது மக்கள் கைக்கு கிடைக்கிறது.

அதன் பிறகு வீட்டிற்கு கொண்டு வந்து காய்ச்ச வேண்டும். அதுவரை பால் கெட்டுப் போகாமல் பக்குவமாக இருக்க ஆவின் நிறுவனத்தின் பதப்படுத்தும் முறை முக்கியமாகும். இதற்கான நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. பதப்படுத்தலில் குறிப்பிட்ட சதவீதம் அளவிற்கு பால் கட்டாயம் குளிரூட்டப்பட வேண்டும். தற்போது நிலவும் 18 மணி நேர மித மிஞ்சிய மின் வெட்டு, ஆவின் பாலையும் பதம் பார்க்கிறது. தினமும் சப்ளையாகும் சுமார் ஒன்றரை லட்சம் லிட்டர் பால் நிர்ணயிக்கப்பட்ட அளவின்படி கூலிங் செய்ய முடியவில்லை. அப்படி செய்ய முற்பட்டால் குறிப்பிட்ட அளவு பால் பதப்படுத்த முடியாமல் ஆவின் நிறுவனத்திலேயே வீணாகி தரையில் கொட்ட வேண்டிய நிலை ஏற்படும். இதனால் ஆவின் நிறுவனம் பெரும் இழப்பை சந்திக்க நேரிடும்.

இதனை சமாளிக்க நிர்ணயித்துள்ள அளவின்படி பால் பதப்படுத்தியதாக கணக்கு காட்டி, 2 சதவீதம் அளவு கூலிங் குறைக்கப்படுகிறது. இதன் விளைவு வீடுகளில் பால் காய்ச்சும்போது திரிந்து வீணாவதாக மதுரை நகர் முழுவதும் பரவலாக புகார் எழுந்துள்ளது. விற்பனை நிலையங்களில் இருந்து வீட்டிற்கு கொண்டு வந்து பிரிட்ஜில் வைத்து சிறிது நேரம் கழித்து காய்ச்சும்போதும் அதே நிலை ஏற்படுவதாக விற்பனை நிலையங்களில் பெண்கள் புகார் கூறினர். சுமார் ஒரு லட்சம் லிட்டருக்கும் மேல் வீணாவதாக கூறப்படுகிறது.

ஒரு லிட்டர் பால் ரூ. 30க்கு விற்கும்போது, மின் வெட்டால் திரிந்து வீணாகாமல் தடுக்க, ஜெனரேட்டர் வசதியாவது ஏற்படுத்த வேண்டும் அல்லது மாற்று வழி காண வேண்டும் என்பதே பொது மக்கள் எதிர்பார்ப்பாகும்.மதுரையில் தினமும் ஒரு லட்சத்து லிட்டர் ஆவின் பால், பதப்படுத்தலில் மின் வெட்டால் 'கூலிங்' குறைவாகி சப்ளை ஆவதால் வீடுகளில் காய்ச்சும்போது திரிந்து வீணாகிறது

## இலவச கால்நடை மருத்துவ முகாம்

செந்துறை, : செந்துறை அடுத்த கல்லாத்தூர் ஊராட்சியில் இலவச கால்நடை மருத்துவ முகாம் நடந்தது.

முகாமை ஊராட்சி துணை தலைவர் செந்தமிழன் தொடங்கி வைத்தார்.  300 மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசிகள் போடப்பட்டன. 30 கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல்,

47 கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கம் செய்யப்பட்டன. 649 ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது.

முடிவில் சிறந்த 10 கிடேரி கன்றுகள் தேர்வு செய்யப்பட்டு அவற்றிற்கு கோட்ட உதவி இயக்குனர் டாக்டர் சாந்தி மற்றும் ஊராட்சி தலைவர் பூவரசி ஆகியோர் பரிசு வழங்கினர். முகாமில் டாக்டர்கள் புகழேந்தி, ஸ்டீபன், ரவீந்திரநாத் தாகூர் ஆகியோர் கொண்ட மருத்துவக்குழுவினர் சிகிச்சை அளித்தனர்.

## நாமக்கல்லில் 18ம் தேதி வான்கோழி வளர்ப்பு பயிற்சி

நாமக்கல், : நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 18ம் தேதி காலை 9 மணிக்கு வான்கோழி வளர்ப்பு குறித்த ஒரு நாள் இலவச பயிற்சி நடக்கிறது.

இதில் வான்கோழி ரகங்கள், வீட்டமைப்பு, தீவனமளிக்கும் முறைகள், நோய் தடுப்பு முறைகள், விற்பனை வாய்ப்பு, வான்கோழி உற்ப த்தி ஆகியவை குறித்து விவசாயிகள், பண்ணையாளர்கள் மற்றும் கிராமப்புற பெண்கள் இதில் கலந்து கொள்ளலாம். விருப்பம் உள்ளவர்கள் நாமக் கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் நேரில் பெயரை பதிவு செய்து கொள்ளலாம்.

## மெட்டாலாவில் மஞ்சள் ஏலம்

நாமகிரிப்பேட்டை, : நாமகிரிப்பேட்டை அடுத்த மெட்டாலாவில் நடந்த மஞ்சள் ஏலத்தில் மூட்டை ரூ6,600 வரை விற்பனையானது.

நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டை அடுத்த மெட்டாலாவில் நேற்று முன்தினம் மஞ்சள் ஏலம் நடந்தது. விவசாயிகள் அதிகளவு மஞ்சள் மூட்டைகளை கொண்டு வந்திருந்தனர். ஆனால், 80 சதவீத மஞ்சள் மூட்டைகள் தரம் குறைந்து சேதமடைந்திருந்தன. ஏலத்தில் விரலி ரகம் அதிகப்பட்சமாக ரூ6600க்கும், உருண்டை ரகம் ரூ5800க்கும் விலை போனது. குறைந்தபட்சமாக விரலி ரூ4000க்கும் உருண்டை ரூ3800க்கும் விலை போனது. ஆனால், பூச்சி விழுந்த மஞ்சளை ரூ1800 வரை வியாபாரிகள் விலை கேட்டனர். அனைத்து மண்டிகளிலும் சுமார் 1200 மூட்டைகள் விற்றன.

## வாழையில் பயிர்பாதுகாப்பு பயிற்சி; நாளை நடக்கிறது

நாமக்கல், : நாமக்கல்லில் நாளை 16ம் தேதி வாழையில் பயிர்பாதுகாப்பு குறித்த பயிற்சி நடக்கிறது.

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் நாளை 16ம் தேதி காலை 9 மணிக்கு வாழையில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு என்ற தலைப்பில் ஒரு நாள் இலவச பயிற்சி நடக்கிறது. வாழையில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் நிர்வாக முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. விவசாயிகள், பண்ணையாளர்கள் மற்றும் கிராமப்புற பெண்கள் இதில் கலந்து கொள்ளலாம். விருப்பம் உள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் நேரில் பெயரை பதிவு செய்து கொள்ளலாம்.

## கோமுகி சர்க்கரை ஆலையில் 18ல் கரும்பு அரவை துவக்கம்

சின்னசேலம், : கச்சிராயபாளையம் கோமுகி சர்க்கரை ஆலை ஆட்சியர் சிவமலர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

விழுப்புரம் மாவட்டம் கச்சிராயபாளையம் கோமுகி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2012-2013ம் ஆண்டுக்கான கரும்பு அரவை பருவம் வரும் 18ம் தேதி தொடங்குகிறது. இவ்விழாவில் அமைச்சர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்கின்றனர். ஆலையின் முழு அரவைத் திறனான 4.30 லட்சம் டன் கரும்பு அரவை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

கடும் எச்சரிக்கைக்கு பிறகும் பதிவு செய்யப்பட்ட, படாத கரும்புகள் கடத்தப்படுவதாக தெரிகிறது. கடந்த 4ம் தேதி கரும்பு கடத்தலில் ஈடுபட்ட ஒரு லாரியை அதிகாரிகள் பறிமுதல் செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் அளித்த தீர்ப்பில் 'பதிவு இல்லாத கரும்பு வைத்திருக்கும் விவசாயிகள் கூட சம்பந்தப்பட்ட எல்லையில் இருக்கும் சர்க்கரை ஆலையில் தடையில்லா சான்று பெற்ற பிறகே எடுத்து செல்ல வேண்டும் என உத்தரவிட்டுள்ளது. ஆகையால் ஆலைக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட, படாத கரும்பு விவசாயிகள் ஆலையின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு முழு அரவை திறனை எட்டும் வகையில் கரும்பு முழுவதையும் அனுப்ப வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.